**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | பிரேமா |
| Father's Name/Husband Name: | தங்கராசு |
| Village : | திருமாந்துறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 51 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீடும் எதிரி சக்திவேலின் வீடும் எதிர் எதிர் வீடு என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது எதிரி சக்திவேலின் வீட்டில் நடந்ததா என்றால் இல்லை, எனது வீட்டில் தான் நடந்தது. எனது மகள் செல்வக்குமாரி என்ன படித்துள்ளார் என்றால், பி.எ. இங்கிலிஷ் படித்துள்ளார். எந்த கல்லூரியில் படித்தார் என்றால் பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் கல்லூரியில் படித்தார். சம்பவமானது எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 05.00 மணிக்கு நடந்தது, எந்த கிழமையில் சம்பவம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவமானது ஞாயிற்றுக் கிழமை நடந்தது என்றால் ஞாயிற்றுக் கிழமை நடக்க வாய்ப்பில்லை. வழக்கு சம்பவம் நடப்பதற்கு முன்பாக எதிரிகளுக்கும் எனக்கும் வேறு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்த தேதி என்ன என்றால் 01.03.2021ம் தேதியில் நடந்தது. யாரை பார்த்து

எதிரி சக்திவேல் எச்சில் துப்பினார் என்றால் என்னையும், எனது மகளையும் பார்த்து. எனது முதல் நிலை சாட்சியத்தில் சம்பவம் நடந்த தேதியை நான் ஏன் சொல்லவில்லை என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் 5 வருடங்களுக்கு முன்பு என்று சொல்லியுள்ளேன். எனது மகன் என்ன வேலை செய்கிறார் என்றால் எனது மகன் சம்பவத்தன்று ஆசிரியராக ஆன்டிரஸ் பள்ளியில் பணிபுரிந்தார் அப்போது கொரோனா காலம் என்பதால் சம்பவ சமயத்தில் கூலி வேலை செய்து கொண்டிருந்தார். எனது மகனின் வேலை குறித்து போலிசார் விசாரணையிலோ, எனது முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி ரேவதி எனது மகளின் தாவாக்கட்டையிலும், இடது காலிலும் அடித்ததை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

எதிரி சக்திவேல் என்னை கீழே தள்ளி மேலே ஏறி உட்கார்ந்து கடித்து குதறினார் என்பதை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். சாட்சி நேசமணி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எந்த உறவு முறையும் கிடையாது. சாட்சி நேசமணி நீதிமன்றத்தில் எனக்கு ஜாமின் கொடுத்தாரா (Surety) என்றால் ஆமாம். சம்பவத்திற்கு பிறகு மருத்துவமனையில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் எனது மகள் செல்வகுமாரியும். சாட்சி காசிநாதன் என்பவரின் வீடு எங்கு உள்ளது என்றால் எனது வீட்டு மேற்கு பகுதியில் இருக்கிறார்கள். அவருக்கு பக்கத்து வீட்டில் ராஜ்குட்டி என்பவர்கள் குடியிருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள்.

தவமணி, பரமசிவம் என்பவர்கள் மீது நான் அடிதடி வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அவர்களுக்கும் எங்களுக்கும் சாக்கடை பிரச்சனை இருந்து வந்தது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் தான் அவர்கள் வீட்டிற்கு சென்று எதிரிகள் இருவரையும் அடித்தோம் என்றாலும் எதிரிகள் வீடுகட்டியதாலும் அவர்கள் வீடு கட்டும்போது மண் வெளியே கொட்டியதால் நான் தான் பொறாமை கொண்டு எதிரிகளை பார்த்து எச்சை துப்பினேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் இரண்டாம் எதிரி ரேவதி வீட்டிலே இல்லை என்றாலும் அப்போது வயலில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எந்த ஒரு புகார் வாக்குமூலமும் காவல்

நிலையத்தில் கொடுக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.